பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மடல்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆனி 30 புதன்கிழமை (14-07-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 228

# கைதிகளின் உண்ணாவிரதம் சில நாட்களுக்கு ஒத்திவைப்பு!

## அவர்களில் 5 பேரின் உடல்நிலை பாதிப்புற்றிருப்பதால் இந்த முடிவு

யாழ்ப்பாணம், ஜூலை 14

விடுதலைப் புலிகளின் காவலில் உள்ள யுத்தக் கைதிகள் தாம் இன்று ஆரம்பிக்கவிருந்த - சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை— ஒரு சில தினங்களுக்கு பின்போட்டுள்ளதாக அறிவித்துள்ளனர்.

கடந்த மாதம் 13 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட தமது முன்னைய உண்ணாவிரதத்தின் காரணமாக தங்களில் ஐவரின் உடல் நிலைமை கூடுதலாகப் பாதிக்கப்பட்டிருப்பதாலேயே தாங்கள் இவ்வாறு முடிவு செய்ததாக யுத்தக் கைதிகள் அறிவித்துள்ளனர்,

புலிகளின் உத்தியோ பூர்வ வானொலியான "புலிகளின் குரல்" இச்செய்தியை வெளியிட்டது.

யுத்தக் கைதிகள் 33 பேருடன் அவர்களைப் பார்க்க யாழ்ப்பாணம் வந்து தங்கி நிற்கும் உறவினர்களும் உண்ணாவிரதத்தை மேற்கொள்ள இருப்பதாக தமக்கு அறிவிக்கப்பட்டது என்று பிரிகேடி

(5 ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டின் பாதுகாப்பு குறித்து எதிர்க் கட்சிகளுடன் ஆராய்வு

### பிரதமர் தலைமையில் தளபதிகள் பங்குபற்றினர்

கொழும்பு, ஜூலை 14

நாட்டின் தற்போதைய பாதுகாப்பு நிலைவரம் தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் படைத் தளபதிகளும், அரசியல் கட்சிகளின் தலைவர்களும் கடந்த வியாழனன்று கூடி ஆராய்ந்ததாக கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் எதிரணி அரசியல் கட்சிகள் விடுத்த வேண்டுகோளின் பேரில் கூட்டப்பட்ட அந்த மாநாடு நாடாளுமன்றத்தில் உள்ள பிரதமரின் அலுவலகத்தில் நடைபெற்றது.

கூட்டுப்படைகள் தலைமையக தளகர்த்தர் லெப்டினன்ட் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா, முப்படைகளின் தளபதிகள்,மற்றும் பதில் பொலீஸ் மா அதிபர் பிரசாங்க டி சில்வா ஆகியோரும்—

அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் எதிர்க்கட்சி பிரதம கொறடா ரிச்சர்ட் பத்திரன, மக்கள் ஐக்கிய முன்னணி தலைவர்

(5 ஆம் பக்கம் பார்க்க)

### ஈழ அகதிகளை மீள அனுப்புதல்:

## சுவிஸ்-இலங்கை உடன்பாடு: அமைச்சரவை ஆராயும்

சுவிட்ஸர்லந்தில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்புவது தொடர்பாக இரு நாடுகளும் செய்து கொள்ளவிருப்பதாகக் கூறப்படும் நகல் உடன்படிக்கை தற்போது கொழும்பு அமைச்சரவையின் பரிசீலனையில் உள்ளது.

அந்த உடன்பாட்டில் உள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:

★ தாயகம் திரும்புபவர்களின் கௌரவம் மற்றும் பாதுகாப்பு மதிக்கப்படவேண்டும்.

(5ஆம் பக்கம் பார்க்க)

## 2,500 பரல் ம.எண்ணெயுடன் 'றுகுணு' அடுத்தவாரம் வரும்

இரண்டாயிரத்து 500 பரல் மண்எண்ணெயை ஏற்றிக் கொண்டு 'றுகுணு' கப்பல் அடுத்தவாரம் பருத்தித்துறைக்கு வரவுள்ளதாக கொழும்பில் இருந்து நேற்று மாலை கிடைத்த தகவல் ஒன்று தெரிவித்தது.

'றுகுணு' கப்பலில் மண் எண்ணெய் பரல்களை ஏற்றும் வேலைகள் கொழும்பில் நேற்று ஆரம்பிக்கப்பட்டதாகவும் —

அந்தக் கப்பல் இன்னும் 4 அல்லது 5 நாட்களில் பருத்தித்துறைக்கு வந்துசேரும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கப்பல் கடந்த மாதம் தடைநீக்கப்பட்ட (பின்னர் தடை செய்யப்பட்ட) பொருள்களை ஏற்றிக் கொண்டு காங்கேசன்துறைக்கு வந்தது. பின்னர் எதிர்பாராத விதமாக கப்பலின் கப்டன் அந்தக் கப்பலை பருத்தித்துறைக்கு கொண்டு வந்து பெரும் பரபரப்பை ஏற்படுத்தினார்.

தற்சமயம் கொழும்பு சென்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## குடும்ப அட்டை பெற 31 ற்கு முன் விண்ணப்பிக்குக

யாழ்ப்பாணம், ஜூலை 14

இது வரை குடும்ப அட்டைக்கு விண்ணப்பிக்காதவர்களும், பூரணமான விவரங்களைப் பதியாதவர்களும் இம் மாதம் 31 ஆம் திகதிக்கு முன் தத்தமது பகுதி கிராமசேவையாளர்களிடம் விண்ணப்பிக்குமாறு போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு கேட்டுள்ளது.

ஒன்றுக்கு மேற்பட்ட குடும்ப அட்டைகளை வைத்திருப்பவர்களும் அவற்றை இம்மாத இறுதிக்குமுன் கிராம சேவையாளரிடம் ஒப்படைப்பதன் மூலம் அநாவசிய சிரமங்களைத் தவிர்த்துக் கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான மேலதிக விவரங்கள் கடந்த 11 ஆம் திகதி உதயனில் வெளியாகியிருந்தது குறிப்பிடத்தக்கது.

### வளலாயில் மோதல்

வல்வெட்டித்துறை ஜூலை 14

நேற்றுக் காலை 6 மணியளவில் வளலாய்ப் பகுதியில் ஸ்ரீலங்காப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் இடம் பெற்றதாகத் தெரியவருகிறது. ஷெல் தாக்குதல்களும் இடம்பெற்றன. (உ-155)

### பொலீஸாருக்கு 800 வாகனங்கள்

கொழும்பு, ஜூலை 14

பொலீஸ் படைக்கு புதிதாக 350 ஜீப்புகள், 400 மோட்டார் சைக்கிள்கள், மற்றும் ஐம்பது கார்கள் புதிதாக வழங்கப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

### தமிழ் இளைஞர் எண்மர் கைது

கொழும்பு, ஜூலை 14

பம்பலப்பிட்டி மெஜஸ்டிக் தியேட்டருக்கு அருகில் நடமாடியதாகக் கூறப்படும் 8 தமிழ் இளைஞர்களை பொலீஸார் அண்மையில் கைது செய்தனர்.

இளைஞர்கள் அனைவரும் பருத்தித்துறையை சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப் பட்டது. (உ-எ)

## தேசிய அரசில் சு.க. சேராது

### சிறிமாவோ அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 14

தேசிய அரசு ஒன்று அமைக்கப்படும் பட்சத்தில் சுதந்திரக் கட்சியோ அல்லது பொது மக்கள் முன்னணியோ சேராது.

எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா முன்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து தேசிய அரசு ஒன்றை அமைப்பது குறித்து ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி பேச்சு நடத்துவதாக

(5 ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் காங்கிரஸ் சேரும்

கொழும்பு, ஜூலை 14

தேசிய அரசு ஒன்றில் சேர்ந்து கொள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தயாராக இருக்கிறது.

அக்கட்சியின் பொதுச் செயலாளர் ரவூப் ஹக்கீம் முன்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காணவும்—ஜனாதிபதி ஆட்சி முறையில் தேவையான திருத்தங்களை மேற்கொள்ளவுமே தேசிய அரசு அமைக்கப்படும் என்பதால், அந்த நோக்கம் நிறைவேற்றப்பட்டவுடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒரு சுயேச்சையான அரசியல் கட்சியாக தொடர்ந்து இயங்கும் என்றும் அவர் கூறினார்.

## ம.ஐ.மு எதிர்க்கிறது

கொழும்பு, ஜூலை 14

தேசிய அரசமைக்கும் முயற்சியை தாங்கள் பூரணமாக நிராகரிப்பதாக மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனா தெரிவித்துள்ளார்,

"மக்கள் விரும்புவது தேசிய அரசை அல்ல பொதுத் தேர்தல் ஒன்றின் மூலம் புதிய அரசு அமைக்கப்படுவதையே அவர்கள் விரும்புகிறார்கள்.

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக தேசிய அரசை அமைக்கப் போவதாகக் கூறுபவர்கள் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிடம் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான யோசனை எதனையும் முன் வைக்கவில்லை.

பொருளாதாரப் பிரச்சினை இனப்பிரச்சினை ஆகியவற்றிலிருந்து மக்களின் கவனத்தை திசை திருப்பவே தேசிய அரசு பற்றிய கருத்தை முன்வைத்து ஆட்சியாளர்கள் புரளி பண்ணுகிறார்கள்—இப்படி தினேஷ் குணவர்த்தனா மேலும் சொன்னார். (உ 6)

## ஐ.தே.க.-ஜ.ஐ.தே.மு. கூட்டு; லலித்தின் மனைவி எதிர்ப்பு

கொழும்பு, ஜூலை 14

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொள்வதை முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலியின் மனைவி சிறிமானி எதிர்த்துள்ளார்.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் முதலாவது தலைவராக லலித் அத்துலத் முதலி இருந்தார். அவர் படுகொலையான பின்னர் முன்னாள் அமைச்சர் காமினி திசநாயக்கா தலைவராக செயற்பட்டு வருகின்றார்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் மீண்டும் இணைவதை அத்துலத் முதலி எதிர்த்து வந்தார். அவரது அந்த நிலைப்பாடு சரியானதே என்று சிறிமானி தெரிவித்தார். (உ-எ)

## அனுராவை நீக்கினால் சு.க. அழிந்து விடுமாம்!

### அவரே எச்சரிக்கிறார்

கொழும்பு, ஜூலை 14

சுதந்திரக்கட்சியில் இருந்து தன்னை வெளியேற்றினால் அக்கட்சி அழிந்து விடும் என்று அனுரா பண்டாரநாயக்கா எச்சரிக்கை செய்திருக்கிறார்.

சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தர்மசிரி சேனநாயக்காவுக்கு அனுப்பி வைத்த எட்டுப் பக்கக் கடிதம் ஒன்றில் அக்கட்சியின் தேசிய அமைப்பாளரும் கம்பஹா மாவட்ட எம்.பியுமான அனுரா பண்டாரநாயக்கா இந்த எச்சரிக்கையை விடுத்திருக்கிறார்.

"சண்டே டைம்ஸ்" "சண்டே ஒப்சேர்வர்" ஆகிய பத்திரிகைகளுக்கு அனுரா அண்மையில் விடுத்த அறிக்கைகள் தொடர்பாக சுதந்திரக் கட்சிப் பொதுச் செயலாளர், அனுராவிடம் கடிதம் மூலம் விளக்கம் கோரியிருக்கிறார்

(5 ஆம் பக்கம் பார்க்க)

### அனுரா மறுப்பு

கொழும்பு, ஜூலை 14

தேசிய அரசு அமைப்பது குறித்து தாம் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவுடன் பேச்சு நடத்தியதாக வெளியான செய்திகளை அனுரா பண்டாரநாயக்கா மறுத்துள்ளார். (உ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 45 ஆம்நாள் கண்ணீர் காவியம்

செல்வன்
**சண்முகநாதன் கிரிதரன் (கிரி)**
(சாவ/ இந்துக்கல்லூரி
உயர்தர வகுப்பு மாணவன் கலைப்பிரிவு)

அன்னையின் மடியில்:- 02 - 11 - 1976
ஆண்டவன் காலடியில்:- 31 - 05 - 1993

எம் இனிய சிவப்பு ராஜகுமாரனே! நீ காவிய மானவனோ! எம் பாசமிகு தம்பி கிரிதரா... இன்று நீ எம்மிடையே இல்லை. ஆனால் உன் அன்பு எமக்கோர் பொன்விலங்கானதுவே!

காவியம் படைத்திட்ட அன்பெனும் ஒளிவிளக்கு விதியெனும் காலதேவனின் காற்றால் அணைந்ததோ இல்லை!... இல்லை!......

அவன் தரணியிலே புதிய உயிரில்லா ஒவியமொன்றை தீட்டிவிட்டு சென்றுள்ளான்.

நீ எமைப்பிரிந்து எத்தனை பொழுதுகள் புலர்ந்தாலும், எத்தனை யுகம் உருண்டோடினாலும், நாம் வாழும் காலங்களில் நீ காலத்தால் அழியாத சிரஞ்சீவியடா. உன் ஆத்மசாந்திக்காக இக்கவிதை சமர்ப்பணம்.

உமது பிரிவால் துயருறும்
நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் இருக்கும்
ரவிந்திரன் அண்ணா மற்றும்
அண்ணாமார், அக்காமார்கள்.

(சி/5464)

# 4 ஆம் மாத இதய அஞ்சலி



| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 08 | 13 |
| 11 | 03 |
| 1941 | 1993 |

**Revd ராசாகுமார் துரைராசா**
(சாவகச்சேரி)

"என் பிதாவின் வீட்டினில்
அனேக வாச ஸ்தலங்களுண்டு
அங்கே நான் ஆறுதலடைவேன்"

மனைவி, பிள்ளைகள்,
மாமி, மாமன்.

"தவமால்"
உடுவில். (5994)

# 45 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி



| அன்னையின் மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 02 | 31 |
| 11 | 05 |
| 1976 | 1993 |

செல்வன்
**சண்முகநாதன் கிரிதரன் [கிரி]**
(சாவ / இந்துக் கல்லூரி
உயர்தர வகுப்பு மாணவன் கலைப்பிரிவு)

அன்பிற்கோர் அணையா விளக்காய் — உதித்த
ஆருயிர்ச் செல்வமே! கிரிதரா
ஆண்டவன் பிள்ளையானாய் நாம்
ஆறுதல் தேடுகிறோம்
இன்னமும் ஏங்குகிறோம்
இறைவனுக்கோ இரக்கமில்லை
ஈடில்லா உன் இழப்பு
ஈட்டி போல் பாயுதையா
உயிரில்லா ஓவியமே உனை எண்ணி
உள்ளத்தால் உருகுகின்றோம்
படித்து முடிக்கும் முன்னமே — பாதியிலே
பறந்து சென்று விட்டாய் கிரிதரா
உலகமே திரண்டாலும் உன்
அன்பிற்கு ஈடில்லைக் கிரிதரா
உன்னை ஏங்கி நெஞ்சம் வாடுகிறோம்
வேரற் கேணிக் கந்தன் திருவடி நிழலில்
அன்புக் கிரியின் ஆத்மா சாந்திபெற — நாம்
கண்ணீரைக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கிறோம்.

உமது பிரிவால் உருகிக் கொண்டிருக்கும்
அப்பா, அம்மா, அக்கா, அம்மம்மா,
மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (சி/[illegible])

## பாடசாலைகளில்

யாழ்ப்பாணம், ஜூலை 14 புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தின் ஆங்கில தினம் இன்று புதன்கிழமை பகல் 11.00 மணிக்கு கொத்தணி அதிபர் திருமதி பி. எப். சின்னத்துரை தலைமையில் நடைபெறும்.

விழாவில் திரு. திருமதி. அருமைநாயகம் (உதவிக் கல்விப் பணிப்பாளர்—ஆங்கிலம்) கௌரவ பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

o o o

கொழும்புத்துறை, செல் யோசெப்ஸ் வித்தியாலய ஆங்கில தினவிழா புதன்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும். (க-51)

o o o

சுழிபுரம் திருவடி நிலை சைவத் தமிழ் கலவன் பாடசாலையின் விளையாட்டுப் போட்டி இன்று புதன் முற்பகல் அதிபர் திருமதி வேலுப்பிள்ளை மகேஸ்வரி தலைமையில் நடைபெறும், (த-28)

o o o

ஏழாலை கொத்தணிப் பாடசாலைகளுக்கு இடையிலான ஆங்கில தினப்போட்டி இன்று புதன் காலை 9 மணிக்கு ஏழாலை மகாவித்தியாலயத்தில் நடைபெறும் (த-45)

## பல்கலை வளாகத்தில் மக்கள் வங்கி

மக்கள்வங்கி யாழ் ஸ்ரான்லி வீதிக்கிளைக் கட்டடத்தில் இயங்கி வரும் யாழ் நவீன சந்தைக் கிளை இன்று புதன்கிழமை முதல் யாழ் பல்கலைக்கழக வளாகத்தில் இயங்க உள்ளது—

யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா இன்று காலை 9.00 மணிக்கு இதனை ஆரம்பித்து வைப்பார்.

மக்கள் வங்கி யாழ் நவீன சந்தைக் கிளையில் கணக்கு வைத்திருப்பவர்கள் யாழ் நகரில் உள்ள ஸ்ரான்லி வீதி, கன்னாதிட்டி பிரதான வீதி கிளைகளுக்கு தமது கணக்குகளை மாற்ற விரும்பினால் அதற்குரிய வசதிகள் செய்து கொடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## விஞ்ஞான தினவிழா

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் விஞ்ஞான தினவிழா இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு, கல்லூரி நினைவு மண்டபத்தில் செல்வன் கு. சிவகுமார் தலைமயில் நடைபெறவுள்ளது விஞ்ஞான மன்றம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

யாழ். பல்கலைக்கழக தாவரவியல் துறைத் தலைவரும்' விலங்கியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி கா. சித்திரவடிவேலு பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும். (ஒ)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

**மகாபொலக் கொடுப்பனவு**

**6 ஆம் தவணைப் பணம்**

பல்கலைக்கழக மாணவர்களுக்கான 6 ஆம் தவணை மகாபொலக் கொடுப்பனவுகளை 14-07-1993 முதல் வழங்க பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கி நவீன சந்தைக் கிளையில் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இக்கொடுப்பனவுகள் பற்றிய முழுவிவரங்களும், அறிவுறுத்தல்களும் பல்கலைக் கழக விளம்பரப் பலகைகளில் இடப்பட்டுள்ளன. இதற்கமைவாக கொடுப்பனவை உரித்துடைய மாணவர்கள் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

பதிவாளர்.
(சி-5461)

திருநெல்வேலி
**ஸ்ரீ காயாரோகணேஸ்வரர் ஆலய**
**நீலாயதாட்சி அம்பாள்**
**வருடாந்த உற்சவகால பேருரை**

காலம்:- 14 - 07 - 93 — 23 - 07 - 93
தினமும் பி. ப. 7 - 30 — 8 - 30 மணி

நிகழ்த்துபவர்:-
மெய்ஞ்ஞானவாரிதி, செஞ்சொற் கொண்டல்
பிரம்ம ஸ்ரீ சபாரத்ன ஈஸ்வர சர்மா அவர்கள்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

சிவசக்தி இந்து இளைஞர் மன்றம்

விளம்பர அன்பளிப்பு:
**கோபால் அன் சன்ஸ்**
213, K. K. S வீதி, யாழ்ப்பாணம்.
(26494)

# ஆலோசனைக் கூட்டம்

வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் கோயிலின் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு அம்பிகையின் தேர்த்திருவிழா அன்று திருநெல்வேலி அம்மன் கோயிலில் நடைபெறும். அலங்கார திருவிழாவை சிறப்பாக நடத்துவதற்கு 15 - 07 - 93 வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு திருநெல்வேலி அம்மன் கோவில் முன்றலில் நடைபெறும் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அம்பிகையின் 11 திருவிழா அடியார்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விழா குழு
(26795)

**சாவகச்சேரி - சங்கத்தானை**
**கந்தசாமி கோவில்**
**பரிபாலன சபை**


மேற்படி பரிபாலன சபையில் உறுப்பினராக சேர விரும்புவோர் ரூபா 30/-ஐ பொருளாளரிடம் செலுத்தி விண்ணப்பப்படிவங்களைப் பெற்று 93-07-31ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

1993 - 07 - 14

செ. யோகேஸ்வரன்
செயலாளர்

26493

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் கந்தையா கனகரட்ணம்**
(மக்கள் வங்கி உதவி முகாமையாளர் - கன்னாதிட்டி)

மலர்வு: 23 — 03 — 1941
உதிர்வு: 24 — 07 — 1988
திதி: 14 — 07 — 1993

எழுதாத கவிதையைப் போல்
எங்கள் இதயத்தில்
என்றும் நீங்கள்
அழியாது இருப்பீர்கள்
விழி அறியாமல்
வழிகின்ற விழிநீரால்
உங்கள் கலையாத
நினைவுகளை மீட்கின்றோம்."

— குடும்பத்தினர்.

56, ஒட்டுமடம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (6343)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கோப்பாய் மத்தி
அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில்

**அலங்கார உற்சவம்**

14 — 07 — 93 புதன்கிழமை தொடக்கம்
23 — 07 — 93 வெள்ளிக்கிழமை வரை
பகல் இரவு உற்சவங்கள்

*தெய்வீகப் பேருரைத் தொடர் நிகழ்ச்சி*
*தினமும் இரவு 8-00 மணி முதல்*

"பெரிய புராண விரிவுரை"

நிகழ்த்துபவர்:
இணுவையூர் நம்பி
ஆறு. திருமுருகன், B.A. அவர்கள்
(ஆசிரியர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

- பரிபாலன சபையினர்.

விளம்பர அன்பளிப்பு:
★ சமயத் தொண்டன் ★
(26483)



Computer Programming
in
BASIC Language

4 MONTHS
*திங்கள், புதன் வகுப்புகள்*
ஆரம்பம்: 19 — 07 — 1993
8 30 மணி

Lectures By: S.P. Sivapathasundaram, M.I.D.P.M. (Lond)

★ இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்
★ கூடிய செய்முறைப் பயிற்சி
★ பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ்
★ கட்டணம் மாதம் ரூ. 400/- மட்டுமே.

C.I.M.A., I.A.B., LOTUS 1-2-3
SHORT-HAND & TYPING
நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன

SCHOOL OF BUSINESS ADMINISTRATION
(Pioneers in Computer Education)
16, 3rd CROSS STREET, JAFFNA
(சி.-5386)


ஜி. சீ. ஈ. சாதாரண தர

# பெறுபேறுகள் கிடைக்காமல் மாணவர்கள் திண்டாட்டம்

## உயர்கல்வியைத் தொடர முடியாத நிலை

யாழ்ப்பாணம், ஜூலை 14

கடந்த ஆண்டு டிசம்பரில் நடந்த ஜி சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சையில் தோற்றிய தனிப்பட்ட பரீட்சார்த்திகள் பலரின் பரீட்சை பெறுபேறுகள் இதுவரை கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும் இந்தப் பெறுபேறுகள் கிடைக்காததால் தாம் கல்வியை தொடரமுடியாதிருப்பதாக பாதிக்கப்பட்ட பல மாணவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மேற்படி பரீட்சைக்குத் தோற்றிய தனிப்பட்ட பரீட்சார்த்திகளில் ஒரு சாராருக்கு பரீட்சை முடிவுகள் தபால்மூலம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

குடாநாட்டில் தீவுப் பகுதியைச் சேர்ந்த பரீட்சார்த்திகள் பலருக்கே இதுவரை பெறுபேறுகள் கிடைக்கவில்லை எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட மாணவர்கள் பலர் தெரிவித்த தகவல்களின்படி குடாநாட்டில் நூற்றுக்கணக்கான பரீட்சார்த்திகளுக்கு இதுவரை பெறுபேறுகள் கிடைக்கவில்லை எனத் தெரிய வருகிறது.

இந்த விடயம் தொடர்பாக யாழ். கல்வி அலுவலக அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது, பரீட்சைப் பெறுபேறுகள் கிடைக்காதது பற்றி யாழ். கல்வி அலுவலகம் கொழும்பு பரீட்சைத் திணைக்களத்துக்கு ஏற்கனவே தகவல் அனுப்பியிருந்ததாகத் தெரிவித்தார்.

ஆயினும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் பெறுபேறுகளுக்கு பரீட்சைத் திணைக்களமே பொறுப்பு என்றும் — இதுவரை பெறுபேறுகள் கிடைக்காத பரீட்சார்த்திகள் தமது விவரங்களைக் குறிப்பிட்டு எழுத்துமூலம் நேரடியாகப் பரீட்சைத் திணைக்களத்துக்கு விண்ணப்பித்து தமது பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் — தெரிவித்தார். (இ-5)

### வீடு தீப்பற்றியது

வீட்டில் உள்ளவர்கள் ஆழ்ந்த நித்திரையில் இருந்தபோது வீடு தீப்பற்றி எரிந்ததால் வீட்டுப் பொருள்கள் மோட்டார் சைக்கிள் மற்றும் தளபாடங்கள் ஆகியவை முற்றாக எரிந்து சாம்பராகின. இச்சம்பவம் கடந்த வெள்ளி இரவு மீசாலையில் இடம் பெற்றது. (உ-117)

## செய்திக் கொத்து

### பரிசளிப்பு

தமிழீழத் திருவள்ளுவர் மன்றம் நடத்திய போட்டிகளில் பரிசு பெற்றோருக்கான பரிசளிப்பு வள்ளுவர் விழாவின் இறுதி நாளான 13-06-93 ஞாயிற்றுக்கிழமை பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் பரிசுகளை வழங்கினார்.

இப்போட்டிகளில் அதிக பரிசுகளைப் பெற்று முதலாம் இடம்பெற்ற மகாஜனாக் கல்லூரிக்கு, உரும்பராயின் வளர்ச்சிக்காக உழைத்த பெரியார் அமரர் வயித்திலிங்கம் நடேசலிங்கம் நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. (க)

### கோபுரங்கள் விழுந்தன

கடந்த 11ஆம் திகதி வீசிய பலத்த காற்றினால் மந்துவில் வயல் வெளியிலிருந்து சரசாலை வரையுள்ள 2½ மைல் நீளமான லக்ஸபான மின்கோபுரங்கள் சாய்ந்து விழுந்துள்ளன. அப்பொழுது கோபுரங்களுக்குள் அகப்பட்டு இரண்டு மாடுகள் இறந்துள்ளன. (க-117)

### நிழல் மர நடுகை

வடமராட்சி கோகிலம் கால்நடை உணவு உற்பத்தியாளர்கள் வடமராட்சியிலும் வல்வெட்டித் துறையிலும் பயன்தரும் நிழல் மரங்களை நட்டு வருகின்றார்கள்.

### உப்பு விளையும் அறிகுறிகள்

தற்போதைய வெயில், வரட்சி ஆகியவற்றால் வல்லை வெளியில் மீண்டும் உப்பு விளையும் அறிகுறிகள் தோன்றியுள்ளன. (க-155)

### திருட்டு

மந்திகை கருகம்பன் மயானத்தில் புதிதாக அமைக்கப்பட்ட குழாய்க் கிணற்றின் பெறுமதிமிக்க "ஹான்ட் பம்ப்" இரவு வேளையில் இனந்தெரியாதோரால் திருடப்பட்டுள்ளது. [க-87]

### கடற்படை அட்டகாசம்

கடந்த சில நாட்களாக ஸ்ரீலங்கா கடற்படையினர் வல்லைக் கடலில் மீனவர்களை அச்சுறுத்தியும் மீன்பிடிப் படகுகளை நோக்கி ஷெல் தாக்குதல்களை நடத்தியும் வருகின்றார்கள். (க-155)

### உதவிப் பணம்

வலிகாமம் வடக்கில் காசநோய், புற்றுநோய், தொழுநோய் போன்றவற்றுக்கான உதவிப் பணம் இப்பிரிவில் உள்ள தபாற் கந்தோர், உபதபாற்கந்தோர்கள் மூலம் விரைவில் வழங்கப்பட உள்ளது. (க-152)

### "கலை அருவி" வெளியீடு

ஸ்கந்தவரோதயக் கல்லூரி தமிழ் மன்றத்தினரின் "கலை அருவி" கையெழுத்துப் பிரதியின் வெளியீட்டு விழா அண்மையில் செல்வன் பிரகாஷ் தலைமையில் நடைபெற்றது. அதிபர் திரு. ப. விக்கினேஸ்வரன் பிரதியை வெளியிட்டு வைத்தார். இளைப்பாறிய கொத்தணி அதிபர் திரு. சி. சிவசரவணபவன் (சிற்பி) ஆய்வுரை நிகழ்த்தினார். [க-152]

### குழாய்க் கிணறு

அராலி மேற்கு ராஜன் கதிர்காமர் பொதுப்பணி மன்ற விளையாட்டுக் கழகத்தின் வேண்டுதலின் பேரில் வலி. மேற்கு பிரதேச சபை சமாதானக்கோட்டை கிராம மக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய குழாய்க்கிணறு ஒன்றை அண்மையில் அமைத்துக் கொடுத்துள்ளது. (க-12-161)


# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு"

எத்தனை ஆண்டுகள் ஓடி மறைந்தாலும், உங்கள் நினைவு எம்மை விட்டகலாது.
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.



**க. குலேந்திரா**
(முன்னாள் உதவி அரசாங்க அதிபர் கோப்பாய், விசேட ஆணையாளர் வலி. கிழக்கு பிரதேச சபை)
மலர்வு: 02 — 11 — 1939
உதிர்வு: 28 — 06 — 1989



**க. சிவசம்பு**
(முன்னாள் புகையிரத பகுதி பிரதம பாதுகாவலர், சமாதான நீதிவான்)
மலர்வு: 22 — 03 — 1905
உதிர்வு: 06 — 07 — 1989



**சி. சொர்ணம்மா**
மலர்வு: 11 — 02 — 1911
உதிர்வு: 03 — 04 — 1990

*தங்கள் பிரிவால் துயருறும் பாசம் மிக்க:*

மனைவி: கு. சிவஈஸ்வரி,
மகன்: கு. சிவேந்திரம்,
தாய், சகோதரர்கள்.

நந்தாவில் அம்மன் கோவிலடி,
கொக்குவில்.

மகள்: கு. சிவஈஸ்வரி,
பேரன்: கு. சிவேந்திரம்.

(6336)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### வெளிவந்துவிட்டது!

புதிய சுகாதாரக் கல்வி ஆண்டு-7 வினா-விடை பாடத் திட்டத்திலுள்ள எட்டு அலகுகளுக்குமான பலதேர்வு வினாக்களும், ஏனைய வினாக்களும் அடங்கியது. ஆக்கம்: எஸ். செல்வநாயகம், வெளியீடு: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம். (6337)

### புலமைப் பரிசில்

Bond கல்வி நிறுவனத்தால் ஒவ்வொரு ஞாயிறும் வெளிவிடப்படும் ஆண்டு - 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரி பயிற்சி வினாத்தாள்கள் பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம், S. K. சாமி — நெல்லியடி. ''பளிங்கு'' — சாவகச்சேரி ஆகிய இடங்களில் பெற்றுக் கொள்ளலாம். (6325)

### தமிழ்மொழி - இலக்கியம்

செயல் நூல் ஆண்டு 11 O/L பரீட்சையில் விசேட சித்திக்கு உதவும் ஒரேயொரு பயிற்சி நூல். மூன்று பகுதிகளாக அனைத்து வகை வினாக்களும் அடங்கிய பத்து செயல்நூல்கள் கொண்டது. விடைகளுடன் ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம். (6339)

### O/L கணிதம்

Distinction பெறுபேறுடைய ஆண்டு 9, 10 உட்பட 15 வருடங்கள் வினாத்தாள் திருத்திய B. Sc. (Cey.) ஆசிரியரால் கற்பிக்கப்படும். இல. 85, சிவன் கோவிடி, திருநெல்வேலி. (26487)

### இலவச திருமண சேவை

33 வயது, கேட்டை, ஜேர்மன் மணமகனுக்கும் 30 வயது, பூரட்டாதி செவ்வாய் 7, அவுஸ்திரேலிய மணப்பெண்ணுக்கும் மணமக்கள் தேவை. மணமகன் இலங்கையிலும் மணப்பெண்ணை அவுஸ்திரேலியா அழைத்தும் திருமணம் செய்யலாம். து விமலா, இலவச திருமண சேவை, நாச்சிமார் கோவிலடி. (26475)

### 2ஆம் தவணைத் தேர்வு

தமிழ் மொழி செயல்நூல்- 6, 7, 8, 9, 10 தமிழ் மொழியில் உச்சப் புள்ளி பெறுவதற்கு உதவும் ஒரேயொரு நூல் வரிசை. தேர்வில் இடம் பெறும் அனைத்து வினாக்களும் அடங்கியது. வினா-விடைகளுடன் ஸ்ரீசுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம். (6338)


## சைவ சமய பரீட்சை

உடுவில், ஜூலை 14

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினரால் பாடசாலை மாணவர்களுக்காக ஆண்டு தோறும் நடத்தப்படும் சைவசமய பாடப்பரீட்சைகள் இவ்வருடம் நவம்பர் மாதம் ஏழாம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆண்டு 3 தொடக்கம் ஆண்டு 13 வரையுள்ள மாணவர்கள் இப்பரீட்சைக்கு தோற்றலாம். மிகத்திறமையான மாணவர்களுக்கு அகில இலங்கைப்பரிசும், வகுப்புகளுக்கு முதல் பரிசாக தங்கப்பதக்கமும் வழங்கப்படும். (உ-152)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



### தர்மலிங்கசர்மா குகனேஸ்வரசர்மா
(கண்ணன்)

தோற்றம்: 19 — 01 — 1969   மறைவு: 28 — 06 — 1989

திதி: 14 — 07 — 1993 (அபரபட்சதசமி)

நந்தாவில் கற்புலத்து அம்மன் கோவில்
நனி சிறந்து ஓங்கியெங்கும் புகழ்பரப்ப
எந்நாளும் தவறாமல் கிரியை யாவும்
இனிது செய்து அடியார்கள் நாளும் வாழ்த்த
தன்னாவி அகாலமாய்ப் பிரியுமட்டும்
தன் கடனில் குறையின்றி இயங்கி வந்த
கண்ணனெனும் குகனேஸ்வரசர்மா எங்கள்
கண்களினைக் குளமாக்கி; சென்றதேனோ.

உற்றார், உறவினர்,
நண்பர்கள்,

நந்தாவில் அம்மன் கோவில்,
கொக்குவில். (26478)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்

### தர்மதுரை அசோக்குமார்
(நோர்வே பல்கலைக்கழக பொறியியல்துறை- இறுதியாண்டு மாணவன்)

தோற்றம்: 1967 — 11 — 17   மறைவு: 1990 — 07 — 14

நிலையில்லா இவ்வுலகில் நிலவாய்த் தோன்றி
நீதி நிறை நற்புகழைப் பெற்ற செல்வா!
கலை பயிற்றும் பல்கலை சேர் கழகத்தின் கண்
கவினாகக் கற்கின்ற பேறு பெற்று
விலையில்லா விஞ்ஞான மாணியாக
விளங்குவாயென்றிருந்த வேளை விதியினாலே
மலை மகளின் மணாளன் நம் சிவன் மலரடியில்
மகனான அசோக்கே! மறைந்தாய் என்னே!

உன் பிரிவால் துயருறும்:
— குடும்பத்தினர்.

'லீலா வாசம்',
முன்னாலை, இணுவில். ([illegible])

## சண்டிலிப்பாய் - சீரணி
## ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்

தமிழீழ மக்கள், போராளிகள் நலனுக்காக

### இலட்சார்ச்சனை விஞ்ஞாபனம்

15-07-1993 வியாழக்கிழமை ஆரம்பமாகி 23-07-1993 வரை காலை 9மணி தொடக்கம் பிற்பகல் 12-30 மணிவரை நடைபெறும் என்பதை அடியார்களுக்கு அறியத்தருகிறோம்.

— தர்மகர்த்தாசபை.

(26484)

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாசிரமத்தின்

சுவாமி விவேகானந்தர் சிக்காக்கோ நூற்றாண்டு நிகழ்ச்சி

### ஸ்ரீ ராமகிருஷ்ண - விவேகானந்த புத்தகக் கண்காட்சி

இடம்: பலாலி ஆசிரிய கலாசாலை

காலம்: 16 — 07 — 1993 வெள்ளிக்கிழமை முற்பகல் 9-00 மணி முதல் நண்பகல் 1-00 மணி வரை

திரு. ஆர். எஸ். நடராசா (அதிபர், பலாலி ஆசிரிய கலாசாலை) புத்தகக் கண்காட்சியைத் திறந்து வைப்பார்.

★ ஆசிரிய கலாசாலையைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே நூல்கள் விற்கப்படும்.

(சி-5460)

## நெல்லை க. பேரன்

இன்று கூட எம்மோடு அமர்ந்திருந்து
சிறகடித்துச் சிந்தனையைப் பறக்கவிட்டு
சிரிப்பை மூடையாய்ச் சிதறவிட்டு
அன்புக் கடலில் மூழ்கடித்து
எம் கூடலை நிறைத்தாயே!
இன்றோடு இரண்டு ஆண்டாம்
நீ பிரிந்து
பிதற்றுகிறார்கள் பித்தர்கள்
போகட்டும் விட்டுவிடு.
என்றும் எம்மோடு இணைந்திருப்பாய்
இது நிச்சயம் நண்பனே!

அறிவோர் கூடல்
நண்பர்கள்.

பருத்தித்துறை.
14 - 07 - 1993. (சி-5458)

## ஈராண்டு நினைவஞ்சலி

மலர்வு: 18 — 03 — 1964



உதிர்வு: 14 — 07 — 1991

### அமரர் குமாரலிங்கம் றஞ்ஜகுமார்
(விரிவுரையாளர் - யாழ். பல்கலைக்கழகம்)

காலங்கள் நகர்ந்திடினும்
கோலங்கள் கலைந்திடினும்
உறவினில் நீ கலந்த உணர்வுடனே
மனதினில் துயருடனே
நித்தமும் நாம் ......
உன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

- குடும்பத்தினர்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி. (26489)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தேர்தல் நாடிகள்

இலங்கையின் தேர்தல் நடைமுறைகளில் மாற்றங்கள் கொண்டுவரப்படும். அந்த மாற்றங்கள் சம்பந்தமான முடிவுகள் இன்னும் மூன்று மாதங்களில் தெரியவந்துவிடும்.

இந்தத் தகவலை அமைச்சர் அபுசாலி வெளியிட்டிருக்கிறார். தேர்தல் முறைகளில் மாற்றம் கொண்டு வருவது குறித்து ஆராய்ந்து வரும் நாடாளுமன்றத் தெரிவிக்குழு தனது சிபார்சுகளை மூன்று மாத காலத்திற்குள் அறிவித்து விடும் என்றும் அவர் கூறியுள்ளார்.

அரசமைப்புச் சட்டத்தை மாற்றுவது குறித்து ஆராய்வதற்கு ஒரு தெரிவுக்குழு. தேர்தல் சட்டங்களை மாற்றுவதனை ஆராய்வதற்கு ஒரு தெரிவுக்குழு. இவ்வாறாக தெற்கு அரசியல் புலத்தில் மாற்றங்களிலும், அவற்றை ஆராய்வதற்கான குழுக்களிலுமே இப்போது கவனம் செலுத்தப்படுகிறது.

இவை யாவும் அடுத்த பொதுத் தேர்தலை நாடிச் செய்யப்படும் கருமங்கள். தெற்கு அரசியல்வாதிகள் சகலரும் இன்னும் ஒரு வருட காலத்தில் நடக்கவுள்ள தேர்தல் மீது கண்வைத்தே தங்கள் செயல் திட்டங்களை ஆக்கி வருகிறார்கள். அரசியல் கட்சிகளும் அவ்வாறே.

தேசிய அரசாங்கம் அமைப்பது. காமினி கட்சியும் ஆளுங் கட்சியும் இணைவது. கட்சி மாறுவதைத் தடை செய்யும் சட்டத்தை நீக்குவது. அனுரா பண்டாரநாயக்கா புதிய கட்சி ஒன்றைத் தோற்றுவிப்பது; அதன் மூலம் ஸ்ரீ. ல. சு. கட்சியை உடைப்பது. இவை யாவும் பொதுத் தேர்தலைக் கருத்தில் கொண்டு, அதனையே முன்வைத்து நகர்த்தப்படும் காய்கள்.

அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களில் ஆட்சேர்ப்பதற்கு எம். பிக்களின், அரசியல் வாதிகளின் ''சிபார்சுச் சீட்டு'' முறையை மீண்டும் நடைமுறைப்படுத்துவது. புதிதாக வேலைவாய்ப்புக்களை உருவாக்குவது. இவை போன்ற வாக்குச் சேகரிக்கும் நிர்வாகச் செயற்பாடுகளும் அரசியல் நடவடிக்கைகளுக்குப் புறம்பாக ஆரம்பமாகி விட்டன.

மொத்தத்தில் தெற்குத் தலைவர்கள் தேர்தல் நாடிகளாக, அதே சிந்தனையுடன் அது சம்பந்தப்பட்ட அலுவல்களில் கவனத்தைச் செலுத்துகிறார்களே அன்றி, நாட்டைப் பல வழிகளாலும் சீரழித்துக் கொண்டிருக்கும் வடக்கு-கிழக்கு யுத்தத்தைப் பற்றியோ, தமிழர்களின் இன்னல்கள் பற்றியோ சிறிதும் அக்கறைப் படுவதாக இல்லை.

தமிழர்களுக்கு, அவர்களுக்குரிய உரிமைகளை வழங்கக் கூடாது; அவர்களை அடிமைகளாக வைத்திருக்க வேண்டும் என்பதில் மட்டும் தெற்கின் அரசியல் தலைவர்களும், பௌத்த மதகுருமாரும் முடிந்த முடிவுடன் இருக்கிறார்கள். அதற்கேற்றாற் போல நாடாளுமன்றில் பேசுவது, பொதுமேடைகளில் பேசுவது, பத்திரிகை வானொலிகளுக்குக் கருத்து தெரிவிப்பது என்பதில் அவர்கள் களைப்பதில்லை. சலிப்பும் வருவதில்லை.

இத்தகைய ஒரு சூழ்நிலையில் தமிழருக்கு எதிரான யுத்தத்தை நிறுத்துவது குறித்தோ, இனப்பிரச்சினையை நீதியாகத் தீர்ப்பது பற்றியோ தெற்கு அரசியல் வாதிகள் ஆர்வம் காட்டுவர்கள் என்று எதிர்பார்ப்பது வீண். அதற்கான சந்தர்ப்பங்களை எப்படிக் கை நழுவி விடுவது என்பதே எப்போதும் அவர்களது நோக்காக உள்ளது. யுத்தக் கைதிகள் விவகாரத்துடன் தொடங்கி சமரசம், சமாதானம், தீர்வு ஆகியவற்றுக்கான வழியைத் திறப்பதற்கு இருந்த அரிய சந்தர்ப்பத்தை முடிவிட்டமை அதற்கான சிறந்த எடுத்துக் காட்டாகும்.

### ஒய்வூதியர் கொடுப்பனவு

காரைநகர் ப.நோ.கூ.சங்க கிராமிய வங்கி மூலம் ஒய்வூதியம் பெறுபவர்களின் ஆடிமாத ஒய்வூதியர் கொடுப்பனவு இன்று புதன்கிழமை காலை 9-00 தொடக்கம் 12-00 மணி வரையும் வழக்கம்பரையில் உள்ள தற்காலிக கிராமிய வங்கி காரியாலயத்தில் நடைபெறும்.

# விளையாட்டு நிகழ்வுகள்

சங்கானை ஜுபிற்றர்விளையாட்டுக் கழகம் டாக்டர் எஸ். இராஜேந்திரம் ஞாபகார்த்தமாக சங்கானை பாரதி மைதானத்தில் நடத்தி வரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ 3.00 மணி:- ஜுபிற்றர் வி. க. ''வி'' அணி எதிர் யுத் வி. க. ''பி'' அணி

★ 3.45 மணி:- ஆனைக்கோட்டை யூனியன் வி. க. ''ஏ'' அணி எதிர் சென் மேரிஸ் வி. க. ''ஏ'' அணி

o o o

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையே யாழ். கல்வித் திணைக்களம் நடத்தும் மாவட்ட நிலை வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் சமூக அணிகள் வருமாறு:-

**வேம்படி மகளிர் கல்லூரியில்**

★ 3.00 மணி:- சாவகச்சேரி டிறிபேர்க் எதிர் யூனியன் கல்லூரி — 17 வயதுப் பிரிவு

★ 3.45 மணி:- வரணி ம. வி. எதிர் உடுவில் மகளிர் — 17 வயதுப் பிரிவு

**அச்சுவேலி புனித திரேசா மகளிர் கல்லூரி**

★ 3.00 மணி:- எண்டிலிப்பாய் ம. வி. எதிர் வல்வை மகளிர் — 17 வயதுப் பிரிவு

o o o

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் — 15 வயதுப் பிரிவினருக்கான — அரையிறுதி ஆட்டங்கள் இன்று காலை 8.30 மணி முதல் நடைபெறவிருக்கின்றன. விவரம் வருமாறு:

★ யாழ். இந்து எதிர் கொக்குவில் இந்து — யாழ். இந்து மைதானத்தில்

★ சென் ஜோன்ஸ் எதிர் சென் பற்றிக்ஸ் — சென் ஜோன்ஸ் மைதானத்தில்.

## இடைத்தேர்தல்

புதுடில்லி, ஜுலை 14

தமிழ்நாட்டில் பழனி நாடாளுமன்றத் தொகுதி, ராணிப்பேட்டை சட்டசபைத் தொகுதி ஆகியவற்றுக்கான இடைத்தேர்தல்கள் அடுத்த மாதம் 19ஆம் திகதி நடத்தப்படும் என்று தேர்தல் ஆணைக்குழு நேற்று அறிவித்தது.

இவ்விரு இடைத் தேர்தல்களும் கடந்த மாதத்தில் நடத்தப்படவிருந்தன. எனினும் பின்னர் அவற்றை தேர்தல் ஆணைக்குழு ஒத்திவைத்தது என்பது தெரிந்ததே. (உ-ஏ)

## ஒத்திவைப்பு

கொழும்பு, ஜுலை 14

வடமேல் மாகாணசபைக்கு முதலமைச்சராக காமினி ஜயவிக்கிரம பெரேராவும் — தென்மாகாணசபைக்கு எம். எஸ். அமரசிறியும் நியமிக்கப்பட்டதை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் தொடர்பாக தீர்ப்பு வழங்குவதை உயர்நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

இம்மனுக்கள் மீதான விசாரணை உயர்நீதிமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை முடிவடைந்தது. (உ-ஏ)

### நாட்டின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தினேஷ் குணவர்த்தன, தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் கே. நவரத்தினம், ஐக்கிய சோசலிச முன்னணியின் சார்பில் அத்தாவுட செனவிரத்ன, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச் எம். அஷ்ரப் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

வடக்கு மாகாணத்துடன் கிழக்கு மாகாணம் தொடர்ந்தும் இணைந்திருக்க வேண்டுமா இல்லையா என்பதைத் தீர்மானிப்பதற்கான சர்வசன வாக்கெடுப்பை கிழக்கு மாகாணத்தில் நடத்தக்கூடிய சூழ்நிலை இப்போது அங்கு இல்லை என்று மாநாட்டில் கலந்துகொண்ட படைத் தளபதிகள் பலவாக அபிப்பிராயம் தெரிவித்ததாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் மூலம் அறியக்கிடக்கிறது.

வடக்கில் இராணுவ நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு முன்னரான இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு ஒன்றை அரசாங்கம் முன்வைக்க வேண்டும் என யாழ் மாவட்ட எம். பி. நவரத்தினம் மாநாட்டில் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

ஐக்கிய சோசலிச முன்னணி எம். பியான அத்தாவுட செனவிரத்னா அதனை ஆமோதித்துக் கருத்து வெளியிட்டார்.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு ஒன்றை அரசியல் கட்சிகள் முன் வைப்பதன் மூலமே புலிகளை தமிழ் மக்களிடம் இருந்து தனிமைப்படுத்த முடியும் என சுட்டிக்காட்டிய ஹமீட்டன் வன்னிசிங்கா இந்த விடயத்தில் அரசியல் கட்சிகளே கூடிய கவனம் எடுக்கவேண்டும் என்று கோரினார். (உ-5)

### கைதிகளின்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யர் ஆனந்த விஜசேகரா வெரித்தாஸ் வானொலிக்குத் தெரிவித்திருப்பதாவது குறித்து யுத்தக் கைதிகளிடம் கேட்கப்பட்டபோது—

தமது உறவினர்கள் உண்ணாவிரதத்தை மேற்கொள்ள இருப்பதாக எந்த சந்தர்ப்பத்திலும் எவருக்கும் உத்தியோக பூர்வமாக தெரிவிக்கவில்லை —என்று யுத்தக் கைதிகளின் சார்பில் பி. எம். பண்டார என்ற கைதி தெரிவித்தார்.

யுத்தக் கைதிகள் 33 பேரும் மட்டுமே இணைந்து சாகும் வரையான உண்ணாவிரதம் பற்றி முடிவெடுத்தார்களா—இதில் உறவினர்கள் சம்பந்தப்பட்டிருக்க வில்லை என்றும் அவர் வலியுறுத்திக் கூறினார்.

தாம் மேற்கொள்ள விருக்கும் சாகும் வரையான உண்ணாவிரதம் குறித்து அரச தரப்பினருக்கும் இதர விதமான ஊடகங்களுக்கும் தாம் அனுப்பிய கடிதத்தின் பிரதியையும் யுத்தக் கைதிகள் வெளியிட்டனர் —என்று ''புலிகளின் குரல்'' தெரிவித்தது. (உ-த)

### தேசிய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெளிவந்த செய்தியின் உண்மை உள்ளதா என்பதை அறிய பொதுமக்கள் முன்னணியின் செயலாளர் டி. எம். ஜயரத்னா முன்னணியின் தலைவர் காமினி திசநாயக்காவைச் சந்தித்தார் என்றும்—

ஐக்கிய தேசியக் கட்சியுடன் தமது முன்னணி சேராது என்று காமினிதிசநாயக்கா உறுதியளித்தார் என்றும் திருமதி சிறிமாவோபண்டார நாயக்கா தெரிவித்தார்.

### அனுராவை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதற்குப் பதிலளித்து அனுரா இந்த 8 பக்கக் கடிதத்தை எழுதிவிருக்கிறார். ''எனவைக் கட்சியில் இருந்து வெளியேற்ற தற்போது எடுக்கப்பட்டு வரும் முயற்சிகள் எனது தந்தை ஆரம்பித்த கட்சியை அழித்துவிடும். கட்சியில் இருந்துவெளியேற்ற சில சக்திகள் திட்டமிட்டுச் செயற்படுகின்றன. 1988 ஜனாதிபதித் தேர்தலில் திருமதி பண்டாரநாயக்கா தோல்வி அடைவதற்கு காரணமாக இருந்த சந்திரிகா குமாரணதுங்காவுக்கு சுதந்திரக் கட்சியில் இடமளிப்பதற்காக என்னை கட்சியில் இருந்து வெளியேற்ற முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.'

இவ்வாறு அனுரா தமது கடிதத்தில் தெரிவித்திருக்கிறார். (உ-ஏ)

### சுவிஸ்-இலங்கை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ திருப்பி அனுப்பப்பட வேண்டிய அகதிகளின் எண்ணிக்கையை இரு நாடுகளும் தீர்மானிக்கும்.

★ தாயகம் திரும்புபவர்களுக்கும் இரு நாடுகளுக்கும் இடையே தொடர்பு நிறுவனமாக பணியாற்ற அகதிகளுக்கான ஐ. நா. ஆணையம் அழைக்கப்படும்.

★ இலங்கை திரும்பும் ஒவ்வொரு அகதிக்கும் சுவிஸ்தூதரகம் ஐ. நா. அகதிகள்தூதரகம் ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்ட இலங்கை அதிகாரிகள் ஆகியோரின் விசாரணைகளை இலங்கை அரசு வழங்கும். தாயகம் திரும்பிய அகதிகள் தாங்கள் படும் இன்னல்கள் பற்றி முறைப்பட்டால் இந்த ஏற்பாடு உதவும்.

★ தமது விருப்பத்துக்கு எதிராக ''பாதுகாப்பற்ற பகுதிக்கு'' செல்லும்படி தாயகம் திரும்புவோர் நிர்ப்பந்திக்கப்பட மாட்டார்கள்.

★ தாயகம் திரும்புவோர்க்கு உதவிகள் வழங்கப்படும்.

# மீனவர் இயந்திரங்களை கடற்படை பறித்தது

வல்வெட்டித்துறை, ஜுலை 14

பருத்தித்துறைக் கடற்பகுதியில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களின் வெளி இணைப்பு மோட்டார் இயந்திரங்களைக் கடற்படையினர் பறித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் செவ்வாய் அதிகாலை இடம்பெற்றது. வடமராட்சிக் கடற்பிராந்தியத்தில் தொழிலுக்குச் செல்லும் மீனவர்களை, கடற்படையினர் கடந்த சில தினங்களாகத் துன்புறுத்தி வருகின்றனர்.

ஆழ்கடலுக்கு மீன்பிடிக்க வரக்கூடாது என்றும், வந்தால் தாக்கப்படுவர் என்றும் கூறிப் பயமுறுத்தி உள்ளனர்.

சில வேளைகளில் கடற்படையினர் மீனவர்களைத் தாக்கியதாகவும், தொழில் உபகரணங்களை எடுத்து கடலில் வீசியதாகவும் வல்வைப் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் தெரிவித்தனர். (அ-155-9)

## இலங்கை 5 விக்கெட்டுக்கு 289 ஓட்டங்கள்

கொழும்பு, ஜுலை 14

இந்திய அணிக்கு எதிராக குருநாகல் வெலகெதர விளையாட்டரங்கில் நடைபெறு வரும் மூன்று நாள் கிரிக்கெட் ஆட்டத்தில் நேற்று இரண்டாம் நாள் ஆட்டம் முடிவடைந்தபோது இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் அணி 5 விக்கெட் இழப்புக்கு 289 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

அணித் தலைவர் ஹசான் திலகரத்ன 101, சரத் ஜெயசூரிய 111, ஹத்துருசிங்க 36 ஓட்டங்களைப் பெற்றனர்.

முன்னதாக இந்திய அணி முதல் நாள் 6 விக்கெட் இழப்புக்கு பெற்ற 342 ஓட்டங்களுடன் தனது முதல் இன்னிங்ஸை நிறுத்திக் கொண்டது. (உ)

## தொலைக்கல்வி பரீட்சை விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஜுலை 14

பயிலுனர் அல்லாத தொலைக்கல்வி ஆசிரியர்களுக்கான இறுதிப் பரீட்சைக்கு விண்ணப்பம் அனுப்புவதற்காக யாழ். இந்துக் கல்லூரி நிலையத்தில் பயிற்சி பெறும் சகல ஆசிரியர்களையும் எதிர்வரும் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு அங்கு சமூகமளிக்கும்படி நிரெஜ்ட போதனாசிரியர் திரு. சரவணமுத்து அறிவித்துள்ளார். (த)

# பெரும்போக நெற்செய்கை; ம. எண்ணெய் விநியோகம்

யாழ்ப்பாணம், ஜுலை 15

அடுத்த கப்பலில் எடுத்து வரப்படும் மண்ணெண்ணெயில் 750 பரல்கள் விவசாயிகளுக்கு ஒதுக்குவது என முடிவாகியுள்ளது.

எதிர்வரும் பெரும்போக நெற் செய்கைக்கு முன்னதாக விவசாயிகள் வயல் நிலங்களை உழுது பதப்படுத்தும் வேலைகளை மேற்கொள்வதற்காகவே அவர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படவுள்ளது.

அரச சார்பற்ற நிறுவனங்கள் எதிர்வரும் பெரும்போகத்திற்குத் தேவையான விதைநெல்லு கொள்வனவுக்குப் பணம் தருவதாகவும் உறுதியளித்துள்ளன. யாழ். மாவட்ட விவசாய உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், கமநல சேவைகள் திணைக்களத்துடன் இணைந்து உரவகைகளை எடுத்து வரவுள்ளன.

கிருமிநாசினிகள் போன்ற பிற விவசாய உள்ளீடுகளைக் கொள்வனவு செய்வதற்குத் தேவையான நிதியின் ஒரு பகுதியை கமநல சேவைத் திணைக்களம் வழங்கும் என்று அண்மையில் நடந்த கூட்டம் ஒன்றில் முடிவாகியுள்ளது. (ஞ-192)

# உணவுப் பொருள்களுடன் 'மெரினால்' வந்து சேர்ந்தது

யாழ்ப்பாணம், ஜுலை 14

சீனி, அரிசி என்பவற்றுடன் 'மெரினால்' கப்பல் நேற்றுக் காலை பருத்தித்துறைக்கு வந்தடைந்தது.

நேற்று முன்தினம் காங்கேசன்துறைக்கு வந்த இந்தக் கப்பல் திடீரென பருத்தித்துறைக்கு ஒரு தொகுதி பொருள்களை அங்கு இறக்கி விட்டு நேற்றுக் காலை பருத்தித்துறைக்கு வந்தது. பொருள்களைஇறக்கும்வேலைகள் உடன் ஆரம்பமாகின.

இந்தக் கப்பலில் ஐந்நூறு மெற்றிக் தொன் சீனியும், எழுநூறு மெற்றிக் தொன் அரிசியும் எடுத்துவரப்பட்டுள்ளன.

ஏற்கனவே இங்கு வந்துள்ள 'குமாரி' கப்பலில் இருந்தும் நேற்றுக் காலை வந்தடைந்த 'மெரினால்'கப்பலில் இருந்தும் ஒரே நேரத்தில் பொருள்களை இறக்கும் வேலைகள் நேற்று பருத்தித்துறை துறைமுகத்தில் மேற்கொள்ளப்பட்டன.

# ஆடி அமவாசைக் கடன்கள் துர்க்கா தேவி ஆலயத்தில்

## மாவை ஆதீனகர்த்தா அறிக்கை

இம்முறையும் ஆடிஅமாவாசை தினத்தன்று (19 - 07 - 1993) பிதிர்க் கடன்களை தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தில் உள்ள துர்க்கா பிஷ்ரணி தீர்த்தக் கேணியில் செய்யலாம் என்று மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் ஆதீன கர்த்தா மஹாராஜஸ்ரீ சு. து. சண்முகநாதக் குருக்கள் அறிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

யாருக்கு எதுநேரும்என்பது இறைவன் மட்டுமே அறிந்த தொன்றாகும். இறையுணர் வுள்ளவர்கள் கூட தங்கட்கு என்ன ஆகப்போகிறதென முன் கூட்டியே அறியக் கூடிய சக்தி கிடைப்பதே கிடையாது. எனவே, எது நேரினும் அதைத் தாங்கிக் கொள்ளக் கூடிய சக்தியையும், ஆற்றலையும் யாவரும் கொண்டிருக்க வேண்டும்.

சைவ அனுஷ்டானங்கள் இவற்றுக்குத் துணைதரும். சைவர்களது சைவ அனுஷ்டானங்களுள் பிரதான நிதியமாவாசையும், ஆடி அமாவாசையும் மிகவும் முக்கியமானவை. இறந்தோருக்கான நியமங்களைச் செய்யும் தினமாகும்.


ஆடி அமாவாசை மாவைக் கந்தனின் தீர்த்த நாளாகும். எமது புனித தீர்த்தக்கரையான கீரிமலை இன்று ஆக்கிரமிக்கப்பட்ட இடமாக, எமது பிதிர் காரியங்களைச் செய்யவிடாது தடுக்கப்பட்ட பிரதேசமாக இராணுவம் தன்வசம் கொண்டிருக்கிறது.

எனவே 19 - 07 - 1993 திங்கட்கிழமை ஆடி அமாவாசை தினத்தன்று சங்கல்ப தீர்த்த ஸ்நானம், இறந்தோருக்கான பிதிர்க்கடன்களையும் எமக்கு சேமங்களுக்குமாக செய்யப்படும் பிதிர் தில தர்ப்பணங்கள் என்பன செய்துகொள்ள தற்கும் தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய நிர்வாகஸ்தர்கள் அங்கே சகல வசதிகளையும் செய்துள்ளனர்.

சைவ மக்கள் அனைவரும் பாதிநிரையாக துர்க்காபுரம் சென்று துர்க்கா பிஷ்ரணி தீர்த்தக் கேணியில், சங்கல்ப தீர்த்த ஸ்நானம் செய்து பிதிர் தர்ப்பணங்களையாற்றி சாந்தி பெறுவதோடு, எமது சைவ பண்பாடு கலாசாரங்களையும் பேணிக் காப்பாற்றுக — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

தவில்மேதை
''விவகார வித்வமணி''
யாழ்ப்பாணம் - இணுவையூர்
# ஸ்ரீ. N.R. சின்னராசா
அவர்களின்
## 2 ஆவது வருட நினைவஞ்சலி



மங்களவாத் தியத்தவிலின் நாதவெள்ளம்
மாரியென எங்கணுமே பொழிந்த அண்ணல்
சிங்கமெனும் தவில்மேதை சின்ன ராஜா
சிவபதமே சேர்ந்திட்ட ஈராண் டின்றே
அங்கமெலாம் பொடிசிலிர்க்க அழகு தாளம்
அணியணியாய் விவகார நாத இன்பம்
பொங்கிடவே தந்தவள்ளல் சின்ன ராஜா
புகழ்பூத்த ஆத்மாவும் பெறுக சாந்தி

இங்ஙனம்
(26499) குடும்பத்தினர்

# பதவி உயர்வு பரீட்சைகள்

யாழ்ப்பாணம், ஜுலை 14
பொது எழுதுவினைஞர் சேவையின் அதி சிறப்பு வகுப்பிற்கு சேவை மூப்பு அடிப்படையில் பதவி உயர்வுவழங்குவதற்கான பரீட்சை எதிர்வரும் 31 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளதாக பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

குடாநாட்டில் இருந்து மேற்படி பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகள் தங்களுக்கான அனுமதி அட்டைகளை கொழும்பில் பரீட்சைத் திணைக்களத்தில் பெற ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக யாழ். அரச அதிபர் தெரிவித்தார்.

o o o

இரண்டாம் தரத்தில் உள்ள கிராமசேவை உத்தியோகத்தர்களை முதலாம் தரத்துக்கு பதவி உயர்த்துவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி பரீட்சைக்குத் தோற்றத் தகுதியுள்ள விண்ணப்பதாரிகள் தங்கள் பிரிவு பிரதேச செயலர் ஊடாக தமது விண்ணப்பங்களை மாகாணசபை அரசாங்க சேவை ஆணைக் குழுவின் செயலாளருக்கு எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

இதுசம்பந்தமான விவரங்கள் இம்மாதம் 23 ஆம் திகதி வர்த்தமானியில் வெளியாகியுள்ளன. இந்த வர்த்தமானியை யாழ். அரச அதிபர் இங்கு எடுத்து வந்துள்ளார். (த-5)

## நாளை

1983 ஆம் ஆண்டு மீசாலை அல்லாரையில் ஸ்ரீலங்கா இராணுவத்துடனான மோதலில் வீரமரணமடைந்த லெப்டினன்ட் ,சீலன், வீரவேங்கை ஆனந்த் ஆகியோரின் பத்தாவது ஆண்டு நிறைவையொட்டி அவர்கள் வீரமரணமடைந்த இடத்தில் அமைக்கப்பட்ட சிறுவர் பூங்கா பாலர் பாடசாலை ஆகியன நாளை திறந்து வைக்கப்படவுள்ளன. (உ-117)

## 2,500 பரல் ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
றுள்ள அந்தக் கப்பல் மண்ணெண்ணெய் பரல்களுடன் மீண்டும் இங்கு வரவுள்ளது குறிப்பிடத்தக்கது. [உ-5]

## ஆலயங்களில்

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீநாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் வருடாந்த இலட்சார்ச்சனை இன்று தொடக்கம் எதிர்வரும் 23ஆம் திகதி வரை நடைபெறும்.

தினமும் இரவு 7மணிக்கு கம்பன் கழகத்தைச் சேர்ந்த திரு. த. சிவகுமாரனின் தெய்வீகத் தொடர் சொற்பொழிவுகள் இடம் பெறும். (த)

o o o

யாழ். கோட்டை முனியப்பர் கோவிலின் வருடாந்த தேர்த்திருவிழா நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3மணியளவில் நடைபெறும். (க-162)

o o o

மானிப்பாய் - சுதுமலை ஸ்ரீவிசாலாட்சி அம்பாள் சமேத ஸ்ரீ விஸ்வநாதசுவாமி தேவஸ்தானத்தின் மகாகும்பாபிஷேகம் இன்று புதன் கிழமை முடிவடையும். [க]

o o o

கோப்பாய் மத்தி ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோவில் அலங்கார உற்சவம் இன்று பகல் 11மணிக்கு கிராம சாந்திக் கிரியையுடன் ஆரம்பமாகி பகல் இரவு உற்சவங்கள் 10 நாட்கள் நடைபெற்று 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை நிறைவுறும்.

உற்சவ காலங்களில் மாலை 6-45 மணி முதல் 7-45 மணி வரை திரு. ஆறு. திருமுருகன் பெரியபுராண விரிவுரை நிகழ்த்துவார். [க]

o o o

யாழ்., அத்தியடி ஸ்ரீசிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் கோயிலிலும் வண்ணார்பண்ணை கோட்டையம்பதி ஸ்ரீ சிவசுப்பிரமணியர் கோயிலிலும் இன்று புதன்கிழமை கார்த்திகைத் திருவிழா நடைபெறும். [க-15]

o o o

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன்கோயிலின் ஸ்ரீ துர்க்கை அம்பாளின் அலங்கார உற்சவம் இன்று புதன்கிழமை ஆரம்பமாகிறது. தேர்த்திருவிழா 22ஆம் திகதி வியாழக்கிழமையும் தீர்த்தத் திருவிழா மறுநாள் வெள்ளிக்கிழமையும் நடைபெறும். [க]

o o o

திருநெல்வேலி ஸ்ரீநீலாயதாட்சி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் இன்று புதன்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

ஆலய உற்சவ தினங்களில் தினமும் இரவு 7-30 மணி தொடக்கம் 8-30மணி வரை பிரம்மஸ்ரீ சபாரத்தின ஈஸ்வர சர்மா தொடர் சொற்பொழிவு நிகழ்த்துவார். [க-17]

o o o

ஈச்சமோட்டை கலட்டிப் புலம் ஸ்ரீஞானவைரவர் ஆலயத்தின் அலங்கார உற்சவம் இன்று புதன்கிழமை பூர்த்தியாகின்றது. (க-17)

o o o

ஏழாலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று காலை 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 26 ஆம் திகதி வரை நடைபெறும், (த-45)

0 0 0

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலை சிவன் கோயில் ஆடிப்பூர அம்பாள் உற்சவம் இன்று புதன்கிழமை 9 மணிக்கு ... மாகி நடைபெறும். (த-45

பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான
அபிவிருத்தி நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்
## அமைத்தல் கூட்டம்

மேற்படி கூட்டம் பின்வரும் ஒழுங்கில் பின்வரும் இடங்களில் 17-7-93 ந் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

1. வடமராட்சி, வடமராட்சி கிழக்கு — பருத்தித்துறை பிரதேசசபை புலோலி.
2. தென்மராட்சி — சாவகச்சேரி நகர சபை
3. வலிகாமம், நல்லூர், யாழ்ப்பாணம் — யாழ். இந்துக் கல்லூரி, குமாரசுவாமி மண்டபம்.

அங்கத்தவர்கள் சம்பந்தப்பட்ட கலந்துரையாடலில் தவறாது பங்குபற்றும் வண்ணம் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

சுந்தரம் டிவகலாலா
பி. உ. உ. ஆணையாளர்,
சி / 5465 யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்கள்

## சிவகுரு - நாகேந்திரம்

(இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்)

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் யாழ் / வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு நாகேந்திரம் 13 - 7 - 93 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான சிவகுரு - தெய்வானைப்பிள்ளையின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - பொன்னம்மாவின் மருமகனும் இராசலெட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பரிபூரணந்தன், சந்தானலட்சுமி, தனலட்சுமி(கண்டி), சிறீஸ்காந்தன் (சுவிஸ்), லட்சுமிகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், காலஞ்சென்ற திருமதி நாகபூசணி அம்மாள் - குகப்பிரகாசம், நாகரத்தினம் (ஓய்வுபெற்ற Railway Guard) ஆனந்தராசா (ஓய்வுபெற்ற ஆசிரியர்). திருமதி இராஜலட்சுமி - ஜெகநாதபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும், கைலாசதுரை, காலஞ்சென்ற சிவலோகநாதன் (கண்டி), சாகினி (சுவிஸ்), பாலராஜா சவுதி) ஆகியோரின் மாமனாரும் மயில்வாகனம் (சிங்கர் மனேஜர்), பேரானந்தம் (யாழ்ப்பாணம் பிரதேச செயலகம்) ஆகியோரின் மைத்துனரும், கிருபாகரன், அமுதகரன், சிறிகரன், றமணகரன், பிரியங்கா, நிருத்திகா, கென்னத் ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (14 - 7 - 93)இன்று பிற்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ச. பேரானந்தம்
(மைத்துனர்)

(999) 535 கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம். (26496)

திருமதி
## பூபாலசிங்கம் பாக்கியலெட்சுமி

திருமதி பூபாலசிங்கம் பாக்கியலட்சுமி காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா — இராசம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற தம்பிமுத்து பூபாலசிங்கம் (இளைப்பாறிய பொது வேலைத்தல ஓவசியர்) அவர்களின் அன்பு மனைவியும், சுனேத்திரா, சிவகுமார், தவகுமார், ஜெயகுமார், உதயகுமார், விஜயகுமார், சத்திகுமார் (யாழ். தொழில் நுட்பக்கல்லூரி, மாணவன்), மேகலா ஆகியோரின் அன்புத்தாயாரும், தவபத்மசிங்கம், சிவாஜினி, பிருந்தா, கோமளா ஆகியோரின் அன்பு மாமியாரும் வைரவி, டினோக்கா, லாவண்யா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஜெயலெக்ஷ்மி, தியாகராச, பத்மநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று இன்று (14-07-1993) நண்பகல் 12 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பூ. சக்திகுமார் [சுரேன்]
(மகன்)

548, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (சி/5466)

காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையறுக்கப்பட்டது)
374, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

## முக்கிய அறிவித்தல்
## கிளைக்குழுத் தேர்தல் 1993

மேற்படி சங்கத்தின் கிளைக்குழுத் தெரிவுக்கான நியமனப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் திகதி 01-08-93 ஞாயிற்றுக்கிழமை மு. ப. 9.00—மு.ப. 10.00 மணி வரை. அபேட்சகர்கள் நியமனங்களில் ஆட்சேபனைகள் ஏதேனும் இருப்பின் அன்றைய தினம் மு. ப. 10 00 மணி முதல் 11.00 மணி வரை தேர்தல் உத்தியோகத்தரால் எழுத்து மூலமான ஆட்சேபனைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேர்தல் திகதி:- 08-08-93 ஞாயிற்றுக்கிழமை மு. ப. 9.00 — பி. ப. 4.00 மணி வரை நடைபெறும்.

பின்வரும் கிளைகளுக்கான நியமனப் பத்திரங்கள் பின்வரும் இடங்களில் ஏற்றுக்கொள்ளப்படும்.

| கிளை இல. | கிளையின் பெயர் | ஏற்றுக்கொள்ளப்படும் இடம் |
|---|---|---|
| 1 | — தோப்பகம் | சித்தங்கேணி பிள்ளையார் கோவிலுக்கு அருகாமை |
| 2 | — விளானை | வழக்கம்பரை, சுளிபுரம் |
| 5 | — காரைநகர் | ,, ,, |
| 6 | — ஆலடி | ,, ,, |
| 9 | — வியாவில் | ,, ,, |
| 11 | — பாளவோடை | ,, ,, |
| 12 | — வாரிவளவு | ,, ,, |
| 13 | — நீலிப்பந்தனை | ,, ,, |
| 3 | — களபூமி | பண்ணாகம். சுளிபுரம் |
| 4 | — கணேஷன் | ,, ,, |
| 8 | — கோவளம் | ,, ,, |
| 7 | — சிவகாமி | தொல்புரம் சந்தைக்கு அருகாமை |
| 10 | — ஊரி | சங்கரத்தைச் சந்தி, வட்டுக்கோட்டை |

(திருமதி) யோ. செல்வரத்தினம்
தேர்தல் உத்தியோகத்தர்

கூட்டுறவு அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
14-07-1993 (சி/5462)

# N. R. சின்னராசா நினைவு தின விழா

இடம்:- இளந்தொண்டர் சபை மண்டபம்
காலம்:- 14-07-1993 பிற்பகல் 4-30 மணி
தலைவர்:- கலாநிதி சபா ஜெயராசா
மங்கள விளக்கேற்றல்:- S. வீரமணிஐயர்
K. R சுந்தரமூர்த்தி
நினைவுரை:- பேராசிரியர் அ. சண்முகதாஸ்
கல்வயல் குமாரசாமி

ஞாபகார்த்த இசைப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்படும்.

வழங்குபவர்கள்:- N. R. சந்தான கிருஷ்ணன் தம்பதிகள்
கோ. இரத்தினகுமார்

சிஷ்ய லய அர்ப்பணம்
தவில்:- K. R. புண்ணியமூர்த்தி
புல்லாங்குழல்:- S. கிருபாநிதி

★ பரிசு பெற்ற மாணவர்களின் இசைஅரங்கு ★
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

- இளந்தொண்டர் சபை
(5593) இணுவில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 14-07-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெறறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org